

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (20.12.2024) ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் செல்வி ஆர்.மாலா முன்னிலையில் பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பயன்பாட்டில் இல்லாத 192 கிலோ 984 கிராம் பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி, தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் திண்டுக்கல் மண்டல மேலாளர் கே.திவ்ய தேஜா அவர்களிடம் ஒப்படைத்தனர். உடன் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில் குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், பழனி சார் ஆட்சியர் எஸ்.கிஷன் குமார், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந.திருமகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், மேலூர் வருவாய் கிராமம், வெள்ளிக்குடிப்பட்டி குக்கிராமத்தில் (20.12.2024) அன்று நடைபெற்ற "மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டை பெறுவதற்கான நகல் அட்டைகளை வழங்கினார்கள். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.அ.ஷோபா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற

# 192 கிலோ 984 கிராம் எடையுள்ள பொன் இனங்கள் வங்கியில் ஒப்படைப்பு!

## அமைச்சர்கள் அர.சக்கரபாணி – பி.கே.சேகர்பாபு வழங்கினர்!

சென்னை, டிச. 22-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி. உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (20.12.2024) ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் செல்வி ஆர்.மாலா முன்னிலையில் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில், காணிக்கையாக வரப்பெற்ற பயன பாட்டில் இல்லாத 192 கிலோ 984 கிராம் பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி, தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளரிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் இந்து சமய அறநிலையத்துறையில் திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்குளங்கள் மற்றும் திருத்தேர்களை சீரமைத் தத்தல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற முனைப் பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கு தேவைப்படும் நிதி ஆதாரங்களை திரட்டும் வகையில் திருக்கோயில்களுக்கு வரவேண்டிய நிலுவையிலுள்ள வாடகை மற்றும் குத்தகை தொகையினை வசூலித்தல், திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற் றுப் பொன் இனங்களை உருக்கி தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்து வருவாய் ஈட்டுதல் என பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பல மாற்று பொன் இனங்களை பிரித்தெடுத்து, பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கிட ஏதுவாக தமிழ்நாட்டை மூன்று மண்டலங்களாக பிரித்து ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி துரைசாமி ராஜு, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் செல்வி ஆர்.மாலா, க.ரவிச்சந்திரபாபு ஆகியோர் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழு வினர் 23 திருக்கோயில்களில் பயன்பாடற்ற பொன் இனங்களை பிரித்து அதில் 13 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்கள் உருக்கி, 442 கிலோ 107 கிராம் எடையுள்ள சுத்த தங்க கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத் தில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.5.79 கோடி வட்டித் தொகையாக கிடைக்கப் பெற்று அந்தந்த திருக்கோயில்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கடந்த வாரம் ஆனைமலை, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 28 கிலோ 906 கிராமும், திருச்சி மாவட்டம், குணசீலம், அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயி லுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்கள் 12 கிலோ 595 கிராமும் மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கிட பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 192 கிலோ 984 கிராம் எடையுள்ள பயன்பாடற்ற பொன் இனங்கள் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக சுமார் 1,000 கிலோ எடை கொண்ட பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி தங்க முதலீட்டுத் திட்டத் தில் முதலீடு செய்யும் போது ஆண்டிற்கு ரூ.12 கோடி வட்டித்தொகையாக கிடைப்பதோடு, ரூ.700 கோடி மதிப்பிலான தங்க கட்டிகள் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு திருக்கோயில்களில் சொத்து மதிப்பும் உயர்வடைகின்ற அற்புதமான திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரித்துக் கொள்கிறேன்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் பெயரில் 2007 ஆம் ஆண்டு 191 கிலோ தங்கம் முதலீடு செய்யப்பட்டு அதன்மூலம் ஆண்டுக்கு ரூ.1.35 கோடி வட்டித்தொகையாக கிடைக் கப்பெற்று வருகிறது. இத்திருக்கோயிலிலுள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிட திருக்கோயில் அறங்காவலர்குழு தீர்மானத்தின்படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் வரப்பெற்றவுடன் நேர்காணல் நடத்தி எவ்வித தவறுக்கும் இடம் கொடாமல் தேர்வு செய்திட வேண்டுமென முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி நேர்காணல் நடத்தப்பட்டு வருகின்ற மார்ச் மாத இறுதிக்குள் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

பழனி திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக்கிற்கு பணியாற்றி வரும் ஆசிரியர்களை ஏற்கனவே தேர்வுசெய்யும் போது இந்து சமய அறநிலையத்துறையின் கல்விப் பிரிவின் விதிமுறைகளுக்குட்பட்டு தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆகவே அவர்களை பணி நிரந்தரம் செய்ய இயலாத நிலையில் தான் அவர்களுக்கான தொகுப்பூதியத்தை உயர்த்தி வழங்கியுள்ளோம்.

திருக்கோயில் யானைகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் வனத்துறையின் மூலமாக அவ்வப் போது மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருவதோடு, கால்நடை மருத்துவர்களால் அறிவுறுத்தப் படும் உணவு கட்டுப்பாடும் கடைபிடிக்கப்படுகிறது. மாண்புமி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி, 26 திருக்கோயில்களிலுள்ள 28 யானைகளை நல்ல முறையில் பராமரித்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்திய வனத்துறை பாதுகாப்பு சட்டப்படி, புதிதாக யானையை வாங்குவதற்கு சட்டத்தில் இடமில்லை. முறையான அனைத்து அனுமதிகளையும் பெற்று தனது சொந்த பராமரிப்பில் யானைகளை வளர்த்து வருபவர்கள் திருக்கோயிலுக்கு யானையினை வழங்க முன்வந்தால் சட்டப்படி அதனை ஏற்றுக்கொள்வதற்கு துறை தயாராகவுள்ளது. அவை யானைகள் இல்லாத திருக்கோயில்களுக்கு வழங்கப்படும்.

பழனி திருக்கோயிலுக்கு புதிய ரோப்கார் அமைப்பது தொடர்பாக அறங்காவலர் குழு மலேசியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு சென்று அங்கு இயக்கப்படும் ரோப்கார் கட்டமைப்புகளை ஆய்வு செய்து வந்துள்ளனர். அதற்கான சாத்தி யக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று அறிவிக்கப்படும் என்று தெரி வித்தார்.

இந்நிகழ்ச்சியில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில் குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், பழனி சார் ஆட்சியர் எஸ்.கிஷன் குமார், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந.திருமகள், இணை ஆணையர்கள் திருமதி. கோ. செ. மங்கயர்க்கரசி, திருமதி. இரா. வான்மதி, எஸ்.மாரிமுத்து, எம்.கார்த்தி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# கோவை மாநகர் மாவட்டத்தில் பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி!

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி மலர்தூவி மரியாதை!

கோவை, டிச. 22-

இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களின் 102 வது பிறந்த நாளையொட்டி மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேராசிரியரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்ட செயலாளர் தொஅ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், மேயர் ரங்கநாயகி, துணைமேயர் வெற்றிச்செல்வன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர்,சோமு என்கிற சந்தோஷ் நாகராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் அசோக் ஆறுக்குட்டி கல்பனாசெந்தில், ஜெயந்தி பொருளாளர்கள் ரஹ்மான் எஸ்.எம்.முருகன், மாநில நெவாளர் அணி துணைச் செயலாளர் நாகராஜ் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதிக்கழக செயலாளர்கள் வட்டக்கழக செயலாளர்கள் ஒன்றிய, நகர, பேரூர்க்கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இனமானப் பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்த நாளையொட்டி மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேராசிரியரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொஅ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், மேயர் ரங்கநாயகி, துணை மேயர் வெற்றிச்செல்வன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர்,சோமு என்கிற சந்தோஷ் நாகராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் அசோக் ஆறுக்குட்டி கல்பனாசெந்தில், ஜெயந்தி, பொருளாளர்கள் ரஹ்மான், எஸ்.எம்.முருகன், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் நாகராஜ் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதிக்கழக செயலாளர்கள், வட்டக்கழக செயலாளர்கள், ஒன்றிய நகர பேரூர்க் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

### சேலம் மண்டல

# தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாநில துணைச் செயலாளர் ஆ.கா.தருண் வேண்டுகோள்!

சேலம், டிச. 22-

சேலம் மண்டல தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசனைக் கூட்டம் நாளை (23.12.2024) சேலத்தில் நடைபெறுகிறது.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளரும், சேலம் மண்டலப் பொறுப்பாளருமான டாக்டர் ஆ.கா.தருண் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அரச நெறியிலிருந்து வழுவாமலும், நெறியில்லாதவைகளை நாட்டை விட்டு நீக்கியும், மறமாட்சியில் தாழ்ச்சியின்மை என்னும் மானம் உடையவன் அரசன் எனும் திருமொழிக்கு ஏற்ப, தந்தை பெரியார் அவர்கள் வகுத்த நெறியில், பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வகுத்த கழக படையின் தலைமை பொறுப்பேற்று தன் நிகரில்லா தமிழ்நாட்டை வழி நடத்தும் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஒப்பற்ற ஆட்சியில், தலைவர் அவர்களின் கரங்களை மேலும் வலு சேர்க்கும் விதமாக ஆட்சியும், கழகமும் இரு கண்களாக எண்ணி அனுதினமும் மக்கள் நலனில் அயராது உழைத்து உலக அரங்கில் தமிழ்நாட்டை தலைநிமிர செய்திருக்கும் கழக இளைஞரணியின் செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்துதலின்படி, கழக தகவல் தொழில்நுட்ட அணியின் சேலம் மண்டல தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் நாளை 23.12.2024 ஆம் தேதி காலை 8:30 மணி அளவில் சேலம் தீர்த்தமலை கவுண்டர் திருமண மண்டபத்தில் நடக்கவிருக்கிறது.

நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்கும் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர், சுற்றுலா துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், முன்னிலை ஏற்கும் சேலம் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் மற்றும் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி அவர்கள்.

கழக உடன்பிறப்புகளின் சமூக வலைதள ஆற்றலாக திகழும் கழக தகவல் தொழில்நுட்ப அணியின் ஆற்றலை போற்றும் விதமாக சிறப்புரை ஏற்கும் அமைச்சர் பெருமக்கள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண் மற்றும் உழவர் நலன் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழில் துறை அமைச்சர் கழக தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர் டி.ஆர்.பி ராஜா, ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மதிவேந்தன், மேலும், தகவல் தொழில் நுட்ப அணியின் இணைச் செயலாளர் மகேந்திரன் மற்றும் அணியின் ஆலோசகர்கள் கோவி லெனின் மற்றும் மனுஷ்ய புத்திரன், அணியின் மாநில துணைச் செயலாளர்கள், தகவல் தொழில் நுட்ப அணியின் சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்க உள்ளார்கள் அது சமயம் சேலம் மண்டல தகவல் தொழில்நுட்ப அணியின் அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்களும், தொகுதி ஒருங்கிணைப்பாளர்களும் மற்றும் ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக உள்ளிட்ட சேலம் மண்டல தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு டாக்டர் ஆ.கா. தருண் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகம் மூலம் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர்,தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர்,வடக்கு மாவட்ட கழக அவை தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளி குழந்தைகளுடன் கேக் வெட்டியும் , பாரா ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு, மாற்றுத்திறனாளி குழந்தைகள் பயிலும் வகையில் சிறப்பான முறையில் பணியாற்றிய பள்ளி ஆசிரியர் பெருமக்களுக்கு, பாராட்டு சான்றுகளை வழங்கியும், உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தை கொண்டாடினார்கள்,உடன் மாற்றுத் திறனாளிகள் நலத்திட்ட அலுவலர்கள், மாவட்ட விவசாய அணி தலைவர் பத்மநாபன்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காட்டு எடையார் இரா.தட்சணாமூர்த்தி,பெரியபட்டு சசி மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம், மேட்டூர் அனல் மின் நிலையத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தின் காரணமாக காயமடைந்து மேட்டூர் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் தலா ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 20.12.2024 அன்று வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம் ஆகியோர் உள்ளனர்.